நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**நவ. 17}ல் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் பயிற்சி**

First Published : 13 Nov 2011 01:00:40 PM IST

புதுக்கோட்டை, நவ. 12: புதுக்கோட்டை அருகே வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு விர்ஜின் தேங்காய் எண்ணெய் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் நவ.17 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுகை மாவட்டத்தில் தென்னை முக்கியமான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கும் தேங்காயிலிருந்து எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. எனினும், அதற்கு கட்டுப்படியான விலை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கிடைக்காத நிலையே உள்ளது.

இந்நிலையில், தென்னையிலிருந்து அதிக வருவாய் ஈட்டும் வகையில் விர்ஜின் தேங்காய் எண்ணெய் தயாரித்தால் விற்பனையில் அதிக வருவாய் பெறலாம் என கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பான தொழில் நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சிமுகாம் வம்பனில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் வியாழக்கிழமை (நவ. 17) நடைபெறவுள்ளது. எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள், தொழில் முனைவோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

**"உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை'**

First Published : 13 Nov 2011 12:59:55 PM IST

புதுக்கோட்டை, நவ. 12: உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் கடைக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கா. பாலன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் சாகுபடிப் பணிகள் தீவிரமடைந்துள்ளது. மாவட்டத்துக்கு தேவையான அனைத்து உரங்களும் உர நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு வருகிறது.

இந்நிலையில், விவசாயிகளுக்கு உரங்களை அதிகபட்ச விலைக்கு மிகாமல் உர விற்பனையாளர்கள் விற்பனை செய்ய வேண்டும். செயற்கையாக உரத் தட்டுபாட்டினை ஏற்படுத்த முயற்சி செய்யக்கூடாது.

கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் உரங்கள் விற்பனை செய்யப்படும் நிலையில், கடைக்காரர்கள் உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள விலைக்கு மிகாமல் விற்பனை செய்து, விவசாயிகளுக்கு ரசீது வழங்க வேண்டும்.

உரங்களின் இருப்பு விவரத்தை தினமும் கடைமுன் அறிவிப்பு பலகையில் எழுதி வைக்க வேண்டும். விவசாயிகளுக்கு மட்டுமே உரங்களை விற்பனை செய்ய வேண்டும். விவசாயம் அல்லாத பிற தொழில்களுக்கு உரங்களை விற்பனை செய்வதோ, உர விற்பனையாளர்கள் உரிமத்தில் அனுமதி பெறாத உர நிறுவனங்களிடமிருந்து உரம் கொள்முதல் செய்வதோ, உரிமம் பெறாமல் விற்பனை செய்வதோ கூடாது. இந்த விதிமுறைகளை மீறும் உர விற்பனையாளர்களின் உர விற்பனை உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் பரிசோதனை செய்த பிறகே உரங்களை பயன்படுத்த வேண்டும்.

உயிர் உரங்களை அதிக அளவில் பயன்படுத்தினால் ரசாயன உரங்களின் தேவை குறைவதுடன், மண் வளத்தையும் பாதுகாக்கலாம் என்றார் அவர்.

**நவீன தொழில்நுட்பத்தில் கரும்பு சாகுபடி பயிற்சி**

First Published : 13 Nov 2011 12:59:15 PM IST

ஆலங்குடி, நவ. 12: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு கரும்பு சாகுபடி மேற்கொள்வது குறித்து விவசாயிகளுக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம், குரும்பூர் இஐடி பாரி சர்க்கரை அரைவை நிறுவனமும் இணைந்து நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் சின்னையன் தலைமை வகித்தார்.

இ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலையின் தலைவர் ராதாகிருஷ்ணன் பயிற்சியை தொடக்கி வைத்தார்.

ஈஐடி பாரி சர்க்கரை ஆலையின் துணைப் பொது மேலாளர் அருணாச்சலம், உழவர் பயிற்சி அலுவலர் ஆ. வைரமுத்து, வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் செ.க. நடராஜன் ஆகியோர் கரும்பு சாகுபடியில் ஒற்றை பரு நாற்றாங்கால் தயார் செய்தல், விதை நேர்த்தி, நிலத்தடி சொட்டு நீர் அமைத்தல், உர நிர்வாகம், நீர் நிர்வாகம், கரும்பு

பயிர்களில் பூச்சிகள் மற்றும் நோய் நிர்வாகம், களை மேலாண்மை, தோகை உரித்தல், விட்டம் கட்டுதல் உள்ளிட்டவைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

**பழ மரக்கன்றுகள் வழங்கும் விழா**

First Published : 13 Nov 2011 10:38:52 AM IST

விழுப்புரம், நவ.12: விழுப்புரம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, சாணிமேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகியவை சார்பில் பள்ளி மாணவர்களுக்கு தென்னை மற்றும் பழ மரக்கன்றுகள் வழங்குதல் மற்றும் செடிகள் நடும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் ச.முருகதாஸ் தலைமை தாங்கினார். தலைமையாசிரியர் வி.கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். மனவளக்கலை மன்ற அறக்கட்டளைத் தலைவர் ஜி.எம்.செல்வராஜன், இணைச் செயலர் துரை.கருணாநிதி, நல்லாப்பாளையம் ஓய்வுபெற்ற ஆசிரியர் அ.எத்திராஜன், உமாபதி, கங்கா தண்டபாணி, இயற்கை வாழ்வியல் இயக்கத் தலைவர் மு.ராமமூர்த்தி, விடியல் விழிப்புணர்வு இயக்கச் செயலர் சு.விஸ்வநாதன் ஆகியோர் மாணவர்களுக்கு தென்னை மற்றும் பழ மரக்கன்றுகளை வழங்கி, அவற்றை நட்டு பாதுகாப்பதின் அவசியத்தை விளக்கினர்.

நிகழ்ச்சியில் 270 தென்னை மரக்கன்றுகளும், 50 பலா மரக் கன்றுகளும் நடப்பட்டன. மனவளக்கலை மன்ற துணைப் பேராசிரியர்கள் சண்முகம், ஜெயராமன், ஆரியூர் ஊராட்சி எழுத்தர் குணசேகரன், ஆசிரியர் ஜேசுபிரதாபன், பள்ளி துணைத் தலைமை ஆசிரியர் வி.ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொழிலதிபர்கள் டி.பி.ஆர்.பாண்டுரங்கன், டாக்டர் ரமேஷ், எல்.ஜனார்தனன், சி.கோவிந்தராசு, செ.யஷ்பால் ஜெயின், டி.டி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் மரக்கன்றுகளை வழங்கினர்.

மாணவர் குழு விளையாட்டு

செஞ்சி, நவ. 12: திண்டிவனம் கல்வி மாவட்ட உடல்திறன் கழகம் சார்பில், கல்வி மாவட்ட அளவில் மாணவர்களுக்கான குழு விளையாடுப்போட்டிகள் செஞ்சி வட்டம் மேல்ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்டது.

பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த 400 மாணவர்கள் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர்.

தலைமை ஆசிரியர் ஜி.டி.பாலசுப்பிரமணியம் (பொறுப்பு) தொடங்கி வைத்தார்.

போட்டி ஒருங்கிணைப்பாளரும், உடற்கல்வி இயக்குநருமான குமாரதேவன் பள்ளி உடற்கல்வி ஆசிரியர் சிரில்குமார் மற்றும் மார்ட்டின், விஜயன், கார்த்திகேயன், சக்திவேல் உள்ளிட்ட ஆசிரியர்கள் போட்டிகளை நடத்தினர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான தனித்திறன் போட்டிகளும் நடைபெற்றது.

**பருத்தியைப் பாதுகாக்க ஆலோசனை**

First Published : 13 Nov 2011 12:50:48 PM IST

பெரம்பலூர், நவ. 12: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழைக்கு பின்னர் பருத்தி பயிரைப் பாதுகாப்பது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் செ. சிவக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேப்பந்தட்டையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பருத்தி ஆராய்ச்சி மையத் தலைவர் ரெ. கவிமணி மேற்பார்வையில், வடகிழக்குப் பருவ மழைக்குப் பின்னர், பயிர்ச் சேதம் மற்றும் மழையினால் ஏற்பட்டுள்ள பூச்சி நோய்த் தாக்குதல் தொடர்பாக, வேளாண் உதவி இயக்குநர்கள் சி. அண்ணாதுரை, பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர்கள் ஆனந்த், கி. பாரதிகுமார், வேளாண் உதவி அலுவலர்கள் நெப்போலியன், நல்லதம்பி ஆகியோர், சித்தளி, குன்னம், பெரிய வெண்மணி, புதுவேட்டக்குடி, துங்கபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பருத்தி, மக்காசோளம் ஆகிய பயிர்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் மானாவாரி பருத்தியில் மழைக்குப் பின்னர் அதிகளவு சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவணி உள்ளிட்ட பூச்சிகளின் தாக்குதல் காணப்படுகிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகளால் தாக்கப்பட்ட பருத்திச் செடியின் நுனிப் பகுதி இலையில், அதிகளவு சாறு உறிஞ்சப்படுவதால், இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாக மாறுவதுடன், இலையின் ஓரப் பகுதிகள் சிவப்பாக மாறி இலையின் உள் பாகத்துக்கு பரவுவதுடன், செடியின் வளர்ச்சி குன்றியிருக்கும். மேலும், பூச்சி தாக்கப்பட்ட இலைகள் மிருதுவாக இல்லாமல், மொரமொரப்பாகவும், கடுமையாகவும் இருக்கும். இந்தப் பூச்சியியைக் கட்டுப்படுத்த, இமிடா குளோப்ரிடி 17.8 எஸ்.எல். என்னும் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பருத்தி பயிரில், தற்போது இலைப்புள்ளி நோய் மற்றும் இலைக்கருகல் நோய் காணப்படுவதால், இந்நோய் தாக்கப்பட்ட இலைகள் கருப்பு நிறங்களில் ஒழுங்கற்ற நிலையில் காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகள் கருகி, உதிர்ந்துவிடும். இதைக் கட்டுப்படுத்த ப்ரபிகோனசோல் (டில்ட்) என்னும் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி என்ற அளவில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

மேலும், இலையின் நிறம் சிவப்பாக மாறும் பகுதிகளில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு மக்னீசியம் சல்பேட் 10 கிராம், துத்தநாக சல்பேட் 5 கிராம் மற்றும் நீரில் கரையக்கூடிய 19:19:19 உரம் 10 கிராம் ஆகியவற்றைக் கரைத்துத் தெளிக்க வேண்டும். இதுபோன்ற பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டால், பருத்தியில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

**யூரியா தட்டுப்பாடு: விவசாயிகள் அவதி**

கு. வைத்திலிங்கம்

First Published : 13 Nov 2011 12:48:43 PM IST

அரியலூர், நவ. 12: அரியலூர் மாவட்டத்தில் யூரியா தட்டுப்பாடு இருப்பதால், உரிய நேரத்தில் உரமிட முடியாமல் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா.பழூர் மட்டுமல்லாது, அரியலூர், செந்துறை, ஆண்டிமடம், ஜயங்கொண்டம் பகுதிகளிலும் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது சம்பா சாகுபடிக்கான நெல் நடவுப் பணிகளை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். நெல் பயிர் நடப்பட்ட 21 மற்றும் 44-வது நாள்களிலும், அறுவடைக்கு முந்தைய காலத்திலும் (நெல் மணிகளில் பூ பூக்கும் முன்னர்) நெல் பயிருக்கு யூரியா உரமிட வேண்டும்.

ஆனால், மாவட்டத்தில் தற்போது யூரியாவுக்கு கடுமையான தட்டுப்பாடு இருப்பதால், விவசாயிகளுக்கு யூரியா கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் யூரியா உரம் அதிகம் இல்லாததால், ரூ. 80 முதல் ரூ. 100 வரை கூடுதல் விலை கொடுத்து தனியார் உரக் கடைகளில் யூரியாவை விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை உள்ளது.

இதுகுறித்து அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் தலைவர் விளந்தை என். ஜயச்சந்திரன் கூறியது:

முன்னர் டி.ஏ.பி., பொட்டாஷ் உரம் தேவையாக இருந்த போது, யூரியா அதிகமாக இருந்தது. அப்போது விவசாயிகள் பொட்டாஷ் உரத்திற்கும், டி.ஏ.பி.க்கும் அலையும் நிலை ஏற்பட்டது.

இப்போது தேவை அதிகமாக உள்ள யூரியாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான அளவு யூரியாவை இருப்பில் வைத்திருக்க வேண்டியவர்கள், தற்போது உரம் வரவில்லை என்று கூறுவது கவலையளிப்பதாக உள்ளது.

ஏற்கெனவே, அரசின் நெல் கொள்முதலில் இருக்கும் ஈரப்பத அளவுப் பிரச்னை, சாகுபடி செய்வதற்காக பெற்ற கடனை அடைக்க, தனியாரிடம் நெல்லை வந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை போன்றவைகளால் விவசாயிகள் அவதிப்பட்டு வரும் நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள யூரியா தட்டுப்பாடு விவசாயிகளை மேலும் பாதித்துள்ளது என்றார் அவர்.

செயற்கைத் தட்டுப்பாடா?: அரசு நிர்ணயிக்கும் விலையில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் உரங்கள் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், தனியார் உரக் கடைகளில் அரசு விலையைக் காட்டிலும், ரூ. 100 வரை கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

தனியார் பயன் பெறும் வகையில், செயற்கை முறையில் யூரியா தட்டுப்பாட்டை உருவாக்கிவிட்டார்களோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாகத் தனியாரிடமும் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், இதனால், திருமானூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தஞ்சாவூர் பகுதிக்கும், ஜயங்கொண்டம், ஆண்டிமடம் தா.பழூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், கும்பகோணம், அணைக்கரை, காட்டுமன்னார்குடி, விருத்தாசலம் பகுதிக்கும் சென்று, தனியார் கடைகளில் யூரியா வாங்கி வருவதாகவும் கூறப்படுகிறது. இதனால், வழக்கத்தைக் காட்டிலும் கூடுதலாக செலவு ஏற்படுகிறது என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், மாவட்டத்துக்குத் தேவையான அளவிற்கு யூரியா வரவில்லை. தகவல் தெரிவித்துள்ளோம். விரைவில் யூரியா வந்துவிடும். தட்டுப்பாடும் நீங்கும் என்கின்றனர் வேளாண் துறை அதிகாரிகள்.

**வேளாண் காப்பீடு: நவ.15 கடைசி**

First Published : 13 Nov 2011 12:31:59 PM IST

சிவகங்கை, நவ. 12: சிவகங்கை மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய நவம்பர் 15 இறுதி நாளாகும்.

எனவே நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேவையான வருவாய்த் துறை ஆவணங்களை பெற்று விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, தங்கள் பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் நவ.15-க்குள் பிரீமியத் தொகையை செலுத்த வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

First Published : 13 Nov 2011 12:48:27 PM IST

அரியலூர், நவ. 12: அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகிலுள்ள சித்தமல்லி நீர்த்தேக்கத்திலிருந்து பொண்ணாற்றுப் பாசனத்திற்காக தண்ணீர் அண்மையில் திறந்துவிடப்பட்டது.

தா.பழூர் ஒன்றியம், கார்குடி ஊராட்சியிலுள்ள சித்தமல்லி நீர்த்தேக்கத்தில் மழைக் காலங்களில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, பின்னர் திறந்துவிடப்படும்.

இந்த நிலையில், பொண்ணாற்றுப் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

இதில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ், சட்டப்பேரவை உறுப்பினர் துரை. மணிவேல் ஆகியோர் பங்கேற்று, சுத்தமல்லி நீர்த்தேக்கக மதகுகளைத் திறந்தனர். இதைத்தொடர்ந்து, தண்ணீரில் மலர்களையும் அவர்கள் தூவினர்.

இந்த நீர்த்தேக்கத்திலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் மூலம், கார்குடி, பாளையங்கரை, வேளாநல்லூர், இருகையூர், கோடங்குடி உள்ளிட்ட 13 கிராமங்களைச் சேர்ந்த பொண்ணாற்றுப் பாசன விவசாயிகள் பயன்பெறுவர். மேலும், 3,901 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 1,179 நஞ்சை நிலங்களும் பயன்பெறும். இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சிவானந்தம், ஒன்றியக் குழுத் தலைவர்கள் தா.பழூர் சுதா சிவசுப்பிரமணியன், திருமானூர் சீனிவாசன், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் அன்பழகன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் வாசுகி ராஜேந்திரன், முருகன், தா.பழூர் ஒன்றியக் குழு உறுப்பினர் கல்யாணசுந்தரம், வட்டாட்சியர் பொன்முடி, பொதுப்பணித் துறை உதவிச் செயற்பொறியாளர் மாசிலாமணி, சண்முகநாதன், சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பசுந்தீவன மேம்பாட்டுத் திட்டத்தில் பயன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 13 Nov 2011 12:50:01 PM IST

அரியலூர், நவ. 12: மத்திய, மாநில அரசுகளின் பசுந்தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு கால்நடைகளின் பங்களிப்பு அளவிட முடியாததாகும். கால்நடைகளுக்கு நல்ல தரமான பசுந்தீவனத்தை போதிய அளவு வழங்குவது முக்கியமான ஒன்றாகும்.

ஆனால், தற்போது பசுந்தீவனத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் மிகப் பெரிய இடைவெளி உள்ளது. மேலும், பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே கிடைக்கிறது.

அதிக ஊட்டச்சத்துகள் உள்ள உயர் விளைச்சலைத் தரக்கூடிய தீவனப் பயிர்களை வளர்க்கும் வாய்ப்புகளை உருவாக்குவதே இதற்கு சிறந்த மாற்று ஆகும். அந்த வகையில், மத்திய, மாநில அரசுகளின் தீவனம் மற்றும் பசும்புல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற விவசாயிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன.

விவசாய நிலங்களிலேயே 0.25 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய தீவன ஒட்டுப் புல் கரணைகள் மற்றும் வேலி மசால் கொண்டு 3:1 வரிசையில் தீவன மேம்பாடு செய்வதற்கும், ஊறுகாய் புல் தயாரிக்கவும், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களில் உள்ள உயிர் சத்துகளின்

பயன்பாட்டை அதிகரித்திடவும், கையில் இயங்கும் புல் வெட்டிகள், மின் சக்தியில் இயங்கும் தீவன வெட்டிகள், புல் வெட்டிகள், பல்லாண்டுத் தீவனப் பயிருக்கு தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் மானிய விலையில் காலநடைப் பராமரிப்புத் துறையின் மூலம் வழங்கப்பட உள்ளன.

தமிழக முதல்வரின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு இனங்களிலும் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ள சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள், கால்நடை உரிமையாளர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற, அருகிலுள்ள அரசு கால்நடை மருந்தகக் காலநடை உதவி மருத்துவர் அல்லது அரசு வேளாண் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, நவம்பர் 30 ஆம் தேதிக்குள் விண்ணப்பித்துப் பயன் பெறலாம் என்றார் அவர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 87.56அடி**

First Published : 13 Nov 2011 09:47:25 AM IST

ஈரோடு, நவ. 12: பவானிசாகர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை 87.56 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,370கன அடி தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதமும், வாய்க்காலில் விநாடிக்கு 1,800 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 20.10 டிஎம்சி.

**பசுந்தீவன அபிவிருத்தி திட்டம்**

First Published : 13 Nov 2011 09:47:07 AM IST

ஈரோடு, நவ. 12: பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பசுந்தீவன அபிவிருத்தி திட்டம் ஈரோடு மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் வெளியிட்டுள்ள செய்தி:

தமிழகத்தில் கடந்த ஓராண்டு காலமாக பால் உற்பத்தி குறைந்து வருகிறது. குறிப்பாக ஆவின் நிறுவனங்களுக்கு வரும் பாலின் வரத்து வெகுவாக குறைந்து விட்டது. இதனால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மத்திய அரசு நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்ட தீவன அபிவிருத்தி திட்டம், மாநில அரசின் தீவன அபிவிருத்தி திட்டம் இணைந்து கால்நடை வளர்ப்போருக்கான பசுந்தீவன அபிவிருத்தி மற்றும் சாகுபடி என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இதன்படி கால்நடைகளை வைத்திருந்து அதிக பால் தரக்கூடிய கோ 3, கோ 4, சோளம், மக்காச்சோளம், தட்டைப்பயிறு, வேலிமசால், குதிரைமசால் போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியமும் தளவாடப் பொருட்களும் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. திட்டத்தில் பயனடைய குறைந்தபட்சம் 4 பசுக்கள், 25 ஆடுகள் வைத்திருக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தை பொறுத்த வரை 4,49,500 பசு மற்றும் எருமை இனங்கள் உள்ளதாக கால்நடைத்துறையினர் கணக்கிட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்திற்கு ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை மற்றும் பால் உற்பத்தியை பெருக்கும் பயிர்களை பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

**15-ல் வெள்ளாடு வளர்ப்பு இலவசப் பயிற்சி**

First Published : 13 Nov 2011 09:26:00 AM IST

காஞ்சிபுரம், நவ. 12: ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி 15-ம் தேதி நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள விவசாயிகள் காஞ்சிபுரம், ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது 044-27264019 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று பயிற்சி மையத்தின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முட்டை விலை**

First Published : 12 Nov 2011 11:27:41 AM IST

நாமக்கல், நவ.11: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.94, சென்னையில் ரூ. 3.00. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமைஅறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள் முதல் விலை கிலோ ரூ.57, முட்டைக் கோழி கிலோ ரூ.44.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மானிய விலையில் விதை நெல் விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2011,01:47 IST

கருத்தை பதிவு செய்ய

வாலாஜாபாத்:சம்பா பட்டத்திற்குத் தேவையான விதைகள், மானிய விலையில் வழங்கப்படும், என வாலாஜாபாத் வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் கூறியதாவது, "தற்போது பின் சம்பா பட்டம் துவங்கியிருப்பதால், விவசாயிகளுக்குத் தேவையான, ஏ.டி.டி., 45 மற்றும் ஏ.டி.டி., 43 சன்ன ரகம் நெல்விதைகள், வாலாஜாபாத் மற்றும் பரந்தூர் வேளாண்மை மையங்களில், போதிய அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.
ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டத்தின் கீழ், ஒரு கிலோவிற்கு 5 ரூபாய் மானிய விலையிலும், விதை கிராம திட்டத்தின் கீழ், 9 ரூபாய் மானிய விலையிலும் வழங்கப்படுகிறது.
இது தவிர உளுந்து பயறுவகைகள் தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 20 ரூபாய் மானிய விலையில் வழங்கப்படும். விவசாயிகள் மானிய விலையில் விதைகளை வாங்கி பயனடையலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**உழவர் பயிற்சி மையத்தில் நாளை இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 14,2011,01:43 IST

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரில் உள்ள, உழவர் பயிற்சி மையத்தில், நாளை,15ம் தேதி, இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.
இது குறித்து உழவர் பயிற்சி மையத் தலைவர் சுந்தரராமன் விடுத்துள்ள அறிக்கை: வெள்ளாடு வளர்ப்பு மற்ற கால்நடைகளை வளர்ப்பதைக் காட்டிலும், அதிக லாபகரமானத் தொழில். ஆடு வளர்ப்பின் மூலம், நமக்கு இறைச்சி, பால், எரு போன்றவை கிடைக்கின்றன. வெள்ளாடுகள் எல்லா தட்பவெப்ப நிடலையிலும், எல்லா நிலங்களிலும் வளர்ந்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் தன்மை உடையவை. இந்திய நாட்டின் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கும், வெள்ளாடு வளர்ப்பு நிரந்தர வருவாய் கொடுக்கும்

தொழிலாக உள்ளது.எனவே உழவர் பயிற்சி மையத்தில், நாளை வெள்ளாடு வளர்ப்பு, குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு, 044-27264019, 9791914898, ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு சுந்தரராமன் தெரிவித்துள்ளார்.

**மூலிகை உணவு பொருட்கள் தயாரிப்பு பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:52 IST

கருத்தை பதிவு செய்ய

சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இலவச உணவு பயிற்சியில் பங்கேற்க விருப்பம் உள்ள பெண்களிடமி ருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இது குறித்து வேளாண்பொருளாதாரத்துறைத் தலைவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் பொருளாதாரத்துறை, மத்திய உயிர் தொழில் நுட்பவியல் துறையின் நிதி உதவியுடன் டிசம்பர் 5 முதல் 9 முடிய சுய உதவிக்குழு மற்றும் இல்லத்தரசிகளுக்கு "மூலிகை உணவு பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை குறித்த தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்' இலவசமாக நடத்தப்பட உள்ளது. இந்த பயிலரங்கத்தின் மூலம் மூலிகை உணவு பொருட்கள், பதப்படுத் துதல், மூலிகை சூப், பொடிவகைகள் உள்ளிட்ட உணவு பொருட்கள் செயல் விளக்கம் அளிக்கப்படும். இதில் பங்கேற்க விருப்பம் உள்ள பெண்கள் தங்களை பற்றிய விவரங்க ளுடன் புகைப்படம், மொபைல்போன் நம்பருடன் 5 ரூபாய்க்கு தபால் தலை ஒட்டப் பட்ட சுய விலாசமிட்ட உறையுடன் முதன்மை ஆராய்ச்சியாளர், உணவு பதப்படுத்துதல், வேளாண் பொருளாதாரத்துறை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் என்ற முகவரிக்கு இம்மாதம் 21ம்தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அந்த செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஆத்தூரில் பருத்தி ஏலம் 100 மூட்டை விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,23:26 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு, பருத்தி மூட்டை வரத்து குறைந்து, 100 மூட்டை பருத்தி, மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த

விவசாயிகள், பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்தில், பி.டி., ரக பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 2,419 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,279 ரூபாய்க்கும், கொட்டு பருத்தி குவிண்டால் குறைந்தபட்சமாக, 889 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 1,810 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏலத்துக்கு பருத்தி மூட்டை வரத்து குறைந்து, 100 மூட்டை பருத்தி, மூன்று லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**கால்நடை தீவன அபிவிருத்தி திட்டம் சேலத்துக்கு ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:17 IST

சேலம்: கால்நடை பராமரிப்புத்துறை மூலம், நடப்பு ஆண்டுக்கான தீவன அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்த, சேலம் மாவட்டத்துக்கு, ஒரு கோடியே 97 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்டத்தில், 2011 - 2012ம் ஆண்டில் கால்நடை வளர்ப்போரிடம், தீவன வளர்ப்பை ஊக்குவிக்கவும், தீவன மேலாண்மையில் உற்பத்தி செலவைக் குறைத்து, வருமானத்தை பெருக்கவும், தீவன அபிவிருத்தி திட்டங்கள், ஒரு கோடியே 97 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்தொகையில், ஒரு கோடியே 67 லட்சத்து 57 ஆயிரம் ரூபாயை, அரசு மானியமாக வழங்குகிறது. அதிகபட்சம், 6,120 கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில், மாவட்டத்தில் உள்ள மற்ற கால்நடை வளர்ப்போர், அதன் பயன்பாட்டை அறிந்து தாமாகவே தீவன அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

அரசின் இலவச கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளுக்கு, நிலம் இருந்து மூன்று ஆண்டுகள் தீவனப் பயிர் சாகுபடி செய்து பராமரிப்பு செய்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற, குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பரப்பில் தொடர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் தீவனம் பயிர் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். நல்ல நீர் ஆதாரம் உள்ள கிணறு, திறந்தவெளி கிணறு உள்ளவராகவும் இருக்க வேண்டும். வேறு அரசு திட்டங்களில் பயன்பெறாதவராக இருக்க வேண்டும். மேலும், இந்த திட்டத்தில், கால்நடை பராமரிப்பு துறையின் உதவி இயக்குனர் மற்றும் வேளாண் உதவி இயக்குனர் ஆகியோரால் தேர்வு செய்யப்படும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு, 30 சதவீதம் ஒதுக்கீடு உண்டு. தகுதியும், ஆர்வமும் உள்ள பயனாளிகள், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி டாக்டர் அல்லது வேளாண் வளர்ச்சி அலுவலரிடம் உரிய ஆவணங்களுடன், வரும் 30ம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையில் அரிதாக சிக்கிய நரமீன்கள் இனபெருக்கம் செய்து அணையில் விட முடிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:17 IST

மேட்டூர்: மேட்டூர் அணையில் நேற்று முன்தினம் நரமீன்கள் அதிக அளவில் பிடிப்பட்டது. அழியும் நிலையில் உள்ள நரமீன் குஞ்சுகளை அதிக அளவில் இனப்பெருக்கம் செய்ய மீன்துறை திட்டமிட்டுள்ளது. மேட்டூர் அணை நீர்பரப்பு மற்றும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி பகுதியில் பாறைகள் அதிக அளவில் காணப்படுகிறது. இந்த பாறை இடுக்குகளில் நரமீன் அல்லது பன்றி மூக்கு மீன் என அழைக்கப்படும் மீன்கள் வசிக்கும். முன்பு மேட்டூர் அணையில் அதிக அளவில் வசித்த இந்த மீன் இனம் தற்போது அழிந்து வருகிறது. நேற்று காலை அணையில் மீனவர்கள் வீசிய வலையில், 60 கிலோவுக்கும் மேற்பட்ட நரமீன்கள் சிக்கியது. இதுவரை இல்லாத அளவுக்கு, 60 கிலோ நர மீன்கள் சிக்கியது மீன்துறை ஊழியர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இதுகுறித்து மீன்துறை உதவி இயக்குனர் வெங்கடாசலம் கூறியதாவது: கட்லா, ரோகு போல தோற்றமளிக்கும், "லேபியோ கொண்டியா' எனப்படும் மீன்களையே மீனவர்கள் நரமீன் அல்லது பன்றி மூக்கு மீன் என அழைக்கின்றனர். இந்த மீன்கள் பாறை இடுக்குகளில் அதிகமாக வசிக்கும்.மீனின் வாய்ப்பகுதியில் புள்ளி, புள்ளியாகவும், பன்றி வாய் போலவும் காட்சியளிப்பதால் பன்றி மூக்கு மீன் என அழைக்கின்றனர். இந்த மீன்கள் இரு ஆண்டுக்கு பின் தற்போது அதிக அளவில் பிடிபடுவது ஆச்சரியமாக உள்ளது. மேட்டூர் அணையில் அழிந்து வரும் மீன் இனங்களில் ஒன்றான நரமீன்களை மீனவர்கள் உதவியுடன் உயிருடன் பிடித்து, மேட்டூர் மீன்விதை பண்ணையில் விட்டு குஞ்சுகள் உற்பத்தி செய்து, அணையில் விட முடிவு செய்துள்ளோம். இதன் மூலம் நரமீன்கள் உற்பத்தியை அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**பருவமழையால் வெற்றிலை உற்பத்தி சூப்பர்! விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:16 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், வடகிழக்கு பருவ மழை காரணமாக, வெற்றிலை உற்பத்தி அதிகரித்துள்ளதோடு, விலையும் உயர்ந்துள்ளது. அதனால், வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆத்தூர் பகுதியில், பைத்தூர், கடம்பூர், மஞ்சினி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம், தாண்டவராயபுரம், கூடமலை, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி, ஆணையம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 2,000 ஏக்கர் பரப்பளவில், வெற்றிலை பயிர்

சாகுபடி செய்யப்படுகிறது. அதில், கறுப்பு மற்றும் வெள்ளை ரக வெற்றிலையை, விவசாயிகள் கணிசமாக பயிர் செய்து வருகின்றனர்.

ஆத்தூரில் விளைவிக்கப்படும் கறுப்பு மற்றும் வெள்ளை ரக வெற்றிலைகள், காரம் மிகுந்து ருசியாக இருப்பதால், சேலம் மட்டுமின்றி, கோவை, கடலூர், விழுப்புரம், சென்னை, பெங்களூரு, புதுச்சேரி, குஜராத், மகாராஷ்டிரா போன்ற வெளிமாநிலங்களுக்கும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
கடந்த சில வாரங்களுக்கு முன், வெற்றிலையில் வாடல், செவட்டை, கொன்னை (இலை சுருட்டல்) நோய் தாக்கம் அதிகம் இருந்தது. அதனால், வெற்றிலை உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டதால், "பீடா' வெற்றிலைகளை அறுவடை செய்ய முடியாத நிலை உருவானது.

இந்நிலையில், சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவ மழையால், வெற்றிலைகள் புதிதாக துளிர் விட்டு, உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும், ஆத்தூரில் உள்ள வெற்றிலை மார்க்கெட்டுக்கு, தினமும், 500 ஒத்துகள் வெற்றிலைகளை, விவசாயிகள் கொண்டு வருவதோடு, விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. அதன்படி, நேற்று ஒரு கவுலி (100 வெற்றிலை), 20 முதல், 35 ரூபாய் என, ஒரு ஒத்து (60 கவுலி வெற்றிலை), 1,500 முதல், 2,000 ரூபாய் வரை விற்பனையானது. அதில், பீடா ரக வெற்றிலை ஒரு ஒத்து, 1,500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தும், விலை கணிசமாக உயர்ந்துள்ளதால், ஆத்தூர் புது பஸ் ஸ்டாண்ட் பகுதியில் உள்ள காந்தி வெற்றிலை மார்கெட்டுக்கு கணிசமான அளவில் வெற்றிலை விற்பனைக்கு வருகிறது.

இதுகுறித்து ஆத்தூர் பகுதி வெற்றிலை விவசாயிகள் கூறியதாவது: வெற்றிலை நடவு செய்த ஓராண்டில் இலைகள் பறித்து விற்பனை செய்யலாம். ஏக்கருக்கு, 30 நாட்களுக்கு ஒருமுறை, 20 ஒத்து என, பருவ காலத்தில், 100 ஒத்து வரை உற்பத்தி இருக்கும். தற்போது வடகிழக்கு பருவ மழை காரணமாக, வெற்றிலை இலைகள் துளிர் விட்டு, வெற்றிலையும் பெரிதாக காணப்படுகிறது. இவ்வாறு கூறினர்.

ஆத்தூர் வட்டார வெற்றிலை உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் ஜெயராமன் கூறியதாவது: தமிழகத்தில், நீலகிரி மாவட்டம் தவிர, அனைத்து மாவட்டத்திலும் வெற்றிலை சாகுபடி உள்ளது. அனைத்து சுப நிகழ்வுகளுக்கும் வெற்றிலை பயன்படுத்தப்படுகிறது. மழை, கோடை காலத்தில் வெற்றிலை சாகுபடி நலிவடையும்போது, விவசாயிகளுக்கு, அரசு நிவாரணம் வழங்குவதில்லை. நிவாரணம் வழங்க வேண்டும். வெற்றிலை நோய்களுக்கு பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்துவதை தவிர்த்து, பூச்சி விரட்டியான கற்றாலை, நொச்சி, ஊமத்தம், வேப்பிலை, எருக்கு ஆகியவற்றை மருந்தாக பயன்படுத்த வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**ஊட்டச்சத்து விழிப்புணர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,23:25 IST

ராசிபுரம்: ராசிபுரம் வித்யபாரதி மாடர்ன் பள்ளியில், மழலையர் குழந்தைகளுக்கு ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. பள்ளி முதல்வர் ஸ்டெல்லா மேரி தலைமை வகித்தார். சத்துணவு நிபுணர் லோகேஷ் பங்கேற்று, குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு தேவையான சரிவிகித உணவு, சீரான உடலமைப்பு, சிறந்த உணவு, உணவு பழக்க முறை குறித்து விளக்கினார். நிகழ்ச்சியில், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவியர் உள்பட பலர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

**மானியத்துடன் தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம் : மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,23:22 IST

நாமக்கல்: "லாபகரமான பால் உற்பத்திக்கு, அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கால்நடைகளின் பராமரிப்புச் செலவினை குறைப்பதில், பசுந்தீவனம் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகை தீவனப் பயிர்களான சோளம், மக்காச் சோளம் போன்றவைகளுடன் அதிக புரதச் சத்து நிறைந்த வேலிமசால், முயல்மசால் மற்றும் தீவன வகை தட்டைப்பயிறு போன்ற பயிர்களை இறவையிலும், மானாவாரியிலும் பயிர் செய்து, கறவை மாடுகளுக்கு கலந்து வழங்குவதன் மூலம், அடர் தீவனத்தின் தேவை குறைந்து, பால் உற்பத்திக்கான செலவினம் குறைந்து, கூடுதல் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை சீராக மேம்பாடுத்தும் நோக்கத்துடன், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலமாக நடப்பு நிதி ஆண்டில், அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி மற்றும் அதன் உபயோக மேலாண் குறித்தான திட்டங்கள், நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் ரகம் கோ 3 அல்லது கோ 4 உடன் முயல் மசால் அல்லது வேலி மசால் தீவனப்பயிர்கள், இறவையில் சாகுபடி, 0.25 ஏக்கர் பரப்பில் செய்வதற்கு, 2,590 ரூபாய், மானாவாரியில், 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச்

சோளம் அல்லது தீவன மக்காச்சோளம் உடன் தீவனத் தட்டைப்பயிறு சாகுபடி செய்ய, 1,350 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

தெளிப்பு நீர் பாசன கருவிகள் நிறுவுவதற்கு, குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ரூபாய் (100 சதம் மானியம்), இதர விவசாயிகளுக்கு, 18 ஆயிரத்து 750 ரூபாய் (75 சதம் மானியம்), கையால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில், 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். (அதிக பட்ச மானியம் 6,375 ரூபாய்) மின் சக்தியினால் இயங்கும் புல் நறுக்கும் கருவியின் மதிப்பில், 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படும். (அதிக பட்ச மானியம் 11 ஆயிரத்து 250 ரூபாய்) தீவனப்புல் வெட்டும் கருவியின் மதிப்பில், 50 சதவீதம் (அதிக பட்சம் 12 ஆயிரத்து 500 ரூபாய்), ஊறுகாய்ப்புல் தயார் செய்வதற்கு, 30 ஆயிரம் ரூபாய் (100 சதம் மானியம்) வழங்கப்படும். மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பம் உள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண் துறை சார்ந்த வேளாண் அலுவலரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற, விருப்பமுள்ள திட்டம், திட்டங்களை குறிப்பிட்ட எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**நெல் விவசாயிகளுக்கு இழப்பீடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:11 IST

கிருஷ்ணகிரி: "புகையான் நோய் தாக்கி நஷ்டமடைந்துள்ள நெல் விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டு தொகை, தமிழக அரசு வழங்க வேண்டும்' என, விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழக விவசாயிகள் சங்க, கிருஷ்ணகிரி மாவட்ட ஆலோசனை கூட்டம், கிருஷ்ணகிரியில் நடந்தது. மாவட்ட செயலாளர் சுந்தரேசன் தலைமை வகித்தார். பெருமாள் முன்னிலை வகித்தார். வெங்கடேசன் வரவேற்றார். மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் கோரிக்கைகள் குறித்து பேசினார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில், சுமார், 40 ஆயிரம் ஏக்கரில் புகையான் நோய் தாக்கி, விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். நோய் தாக்குதலுக்கு உள்ளான விவசாயிகளுக்கு, தமிழக அரசு, ஏக்கர் ஒன்றுக்கு, 25 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மாங்கூழ் தொழிற்சாலைகளுக்கு, மாவை விற்பனை செய்த விவசாயிகளுக்கு, பல தொழிற்சாலை உரிமையாளர்கள் பணம் கொடுக்கவில்லை. மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து, மா விவசாயிகளுக்கு உரிய பணத்தை பெற்றுத்

தரவேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கால்நடை துறையில் நடக்கும் முறைகேடுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி, வரும் 16ம் தேதி கிருஷ்ணகிரியில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாரியப்பன், பூபதி, மணி, சங்கர், சத்தியமூர்த்தி, தேவன், மகளிர் அணி செயலாளர் ஜோதி, கோனப்பன், குப்பன்னன் உள்ளிட்ட பல விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கால்நடை தீவன அபிவிருத்தி திட்டம் சேலத்துக்கு ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2011,23:41 IST

சேலம்: கால்நடை பராமரிப்புத்துறை மூலம், நடப்பு ஆண்டுக்கான தீவன அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்த, சேலம் மாவட்டத்துக்கு, ஒரு கோடியே 97 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்டுள்ள அறிக்கை: சேலம் மாவட்டத்தில், 2011 - 2012ம் ஆண்டில் கால்நடை வளர்ப்போரிடம், தீவன வளர்ப்பை ஊக்குவிக்கவும், தீவன மேலாண்மையில் உற்பத்தி செலவைக் குறைத்து, வருமானத்தை பெருக்கவும், தீவன அபிவிருத்தி திட்டங்கள், ஒரு கோடியே 97 லட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்தொகையில், ஒரு கோடியே 67 லட்சத்து 57 ஆயிரம் ரூபாயை, அரசு மானியமாக வழங்குகிறது. அதிகபட்சம், 6,120 கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில், மாவட்டத்தில் உள்ள மற்ற கால்நடை வளர்ப்போர், அதன் பயன்பாட்டை அறிந்து தாமாகவே தீவன அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

அரசின் இலவச கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளுக்கு, நிலம் இருந்து மூன்று ஆண்டுகள் தீவனப் பயிர் சாகுபடி செய்து பராமரிப்பு செய்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற, குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் பரப்பில் தொடர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் தீவனம் பயிர் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். நல்ல நீர் ஆதாரம் உள்ள கிணறு, திறந்தவெளி கிணறு உள்ளவராகவும் இருக்க வேண்டும். வேறு அரசு திட்டங்களில் பயன்பெறாதவராக இருக்க வேண்டும்.

**உரவிலையை கட்டுப்படுத்த புதிய யோசனை: தஞ்சையில் விவசாய சங்க செயலாளர் பேட்டி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:54 IST

தஞ்சாவூர்: ""உரத்தின் விலையை கட்டுப்படுத்த தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் மானிய விலையில் உரம் விநியோகம் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்று அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் மணி கூறினார்.

இதுகுறித்து அவர் தஞ்சையில் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் அ.தி.மு.க., அரசு பொறுப்பேற்ற பின்னர் பல்வேறு அதிரடி மாற்றங்களை அறிவித்து வருகிறது. ஆனால், அதற்கு பொருத்தமான மாற்று ஏற்பாடுகளை செய்ய தவறுகிறது. கிராமப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காத நேரத்தில், மாற்று வழியாக மக்கள் நலப்பணியாளர் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டது. இவர்கள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை செயல்படுத்தி வந்தனர். தமிழகத்தில் உள்ள 17 ஆற்றுப்படுகைகள், 39 ஆயிரம் ஏரிகள், ஆயிரத்துக்கும் அதிகமான குளங்கள் ஆகியவற்றில் இருந்து புதர்களை அகற்றுவது உட்பட பல்வேறு பணிகளை மக்கள் நலப்பணியாளர் செய்து வந்தனர். இந்நிலையில் 13 ஆயிரத்து 500 மக்கள் நலப்பணியாளர்களை நீக்கியதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதேபோல், சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம் சட்டத்தை ரத்து செய்து உழவர் பாதுகாப்பு திட்டத்தை கொண்டு வந்தது. விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள் பெற்று வந்த சட்ட உரிமையை ரத்து செய்து, சலுகையை எதிர்பார்க்கும் நிலைக்கு விவசாயிகளை முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்துள்ளார்.

இவ்வாறு விவசாயிகளை திரிசங்கு நிலைக்கு முதல்வர் ஜெயலலிதா தள்ளி வருகிறார். உரவிலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த நிலையை போக்க தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் மானிய விலையில் உரங்கள் விநியோகம் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் ஜனவரி மாதம் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினர். அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க மாவட்ட தலைவர் வாசு, செயலாளர் பக்கிரிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**நவீன தொழில்நுட்பத்தால் நாசமான பயிர்கள் 90 நாளாகியும் கதிர் வராததால் விவசாயி விரக்தி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2011,22:54 IST

தஞ்சாவூர்: தஞ்சை அருகே நடவு நட்டு 90 நாட்கள் ஆன நிலையிலும், நெற்பயிரில் கதிர் வெளியே வராமல் பயிர் மலட்டுத்தன்மையுடன் காணப்படுவதால், விவசாயி அதிர்ச்சியடைந்துள்ளார். தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே கூடநாணல் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த பாலமுருகன் (23). இவருக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும் ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கு ஒத்திக்கு வாங்கி விவசாயம் செய்து வந்தார். இதில், இரண்டு ஏக்கர் நிலத்தில் சொந்தமாக வைத்திருந்த விதைகளை நாற்று இட்டு நடவு செய்தார். அந்த நிலங்களில் ஏக்கருக்கு 30 மூட்டை வீதம் 60 மூட்டைகள் விளைந்தன. ஆனால், நவீன முறையில் விவசாயம் செய்தவதுக்காக தஞ்சையில் உள்ள தனியார் விதை விற்பனை கடையில் 650 ரூõய்க்கு 12 கிலோ விதையை வாங்கி சென்றார்.

அவற்றை நாற்று இட்டு, திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்தார். ஆராய்ச்சி செய்யப்பட்ட விதை என்று கடைக்காரர் கூறினார். திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்தால் அதிகபட்சம் 100 மூட்டையும், குறைந்தபட்சம் 60 மூட்டையும் விளையும் என கூறப்பட்டது. அவர்கள் கூறியபடி ரசாயன உரங்கள் மற்றும் மருந்துகளை பயன்படுத்தி பயிர்களை வளர்த்தார்.

"கோனோவீடர்' மற்றும் ஆட்கள் மூலம் களை எடுத்தார். ஒரு கட்டத்தில் நெற்பயிர் சாம்பல் நிறத்தில் காணப்பட்டது. ஒரு பயிரை பறித்துக் கொண்டு விதை விற்பனை கடைக்கு சென்றபோது, அதற்கு ஒரு பூச்சிமருந்தை தெளிக்க சொல்லி கொடுத்தனர். அதையும் தெளித்தார். ஆனால், பயிர்கள் கருக ஆரம்பித்தன. கடைக்காரர் போகப்போக சரியாகும் என்று தெரிவித்துள்ளார். ஆனால், பயிர்கள் சரியாகவில்லை. இதற்காக அவர் 15 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளார். ஆனால், நெற்பயிரில் 90 நாட்களுக்கு மேலாகியும் நெல்மணிகள் வெளியே வரவில்லை. பயிர் மலட்டுத்தன்மையுடன் காணப்பட்டது. இதில், சில பகுதிகளை அழித்து உழவும் செய்து விட்டார். இதனால், பாலமுருகனின் தந்தை அசோக் மனமுடைந்து உடல்நிலை பாதிக்கப்பட்டார். தஞ்சையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட அவர் இறந்த விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மிளகு உற்பத்தி 43 ஆயிரம் டன்னாக குறையும்**

நவம்பர் 13,2011,03:13



கொச்சி : இந்தியாவின் மிளகு உற்பத்தி, நடப்பு 2011-12ம் பயிர் பருவத்தில், 5 ஆயிரம் டன் குறைந்து 43 ஆயிரம் டன்னாக குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2010-11ம் பயிர் பருவத்தில் 48 ஆயிரம் டன்னாக இருந்தது. கோழிக்கோட்டில் தலைமை அலுவலகத்தை கொண்டுள்ள கோக்கோ, பாக்கு மற்றும் நறுமணப் பொருள்கள் மேம்பாட்டு இயக்குனரகம் (டாஸ்டு), கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மிளகு உற்பத்தி குறித்து ஆய்வு மேற்கொண்டது.

**விளைச்சல்:** மிளகு விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், அதிக அளவில் பூச்சித் தாக்குதல் காரணமாக, நடப்பு பயிர் பருவத்தில் மிளகு உற்பத்தி குறையும் என்று தெரியவந்துள்ளது. மேலும், மிளகு மாதிரிகளை ஆய்வு செய்ததிலும், பூச்சி தாக்குதல் காரணமாக, அவற்றின் விளைச்சல் குறைவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவை பொறுத்தவரை, கர்நாடகாவில் அதிக அளவில் மிளகு உற்பத்தியாகிறது. நடப்பு பருவத்தில், இம் மாநிலத்தின் மிளகு உற்பத்தி 25 ஆயிரம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கேரளாவில் நடப்பு பருவத்தில் மிளகு உற்பத்தி 13 ஆயிரம் டன்னாக இருக்கும் என தெரிகிறது. தமிழகம் 5,000 டன் அளவிற்கு மிளகு உற்பத்தி மேற்கொள்ளும் என,"டாஸ்டு' மதிப்பிட்டுள்ளது. எனினும், இது குறித்த இறுதி ஆய்வறிக்கை, வரும் சர்வதேச மிளகு கழக (ஐ.பி.சி) மாநாட்டில் வெளியிடப்பட உள்ளது.

**குறைவு:** கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு, இந்தியா மிளகு உற்பத்தியில் சிறந்து விளங்கியது. அப்போது நாட்டின் மிளகு உற்பத்தி 1 லட்சம் டன் என்ற அளவில் மிகவும் உயர்ந்திருந்தது. இந்த உற்பத்தி, படிப்படியாக குறைந்து தற்போது, 50 ஆயிரம் டன்னுக்கும் குறைவாக சரிவடைந்துள்ளது. இந்தியாவின் மிளகு உற்பத்தி 50 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்துள்ளதையடுத்து, அதன் ஏற்றுமதியும் குறைந்துள்ளது.

கேரளாவில், ரப்பர், மிளகு மற்றும் நறுமணப் பொருள்கள் அதிகம் விளைகின்றன. எனினும், அதிக ஆதாயம் தரும் ரப்பர் உற்பத்தியில் தான் கேரள விவசாயிகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். இதனால் மிளகு பயிரிடும் பரப்பளவு, கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருகிறது. இதன் காரணமாக, இம்மாநிலத்தின் மிளகு உற்பத்தி சரிவடைந்து வருகிறது. மிளகு பயிரிடும் பரப்பில், பிற பணப்பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

மேலும், உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாலும் மிளகு பயிரிடுவது குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. இது குறித்து, கேரள வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் சந்தை நுண்ணறிவு மையம் ஆய்வு மேற்கொண்டது. அதில், கடந்த ஒன்பது ஆண்டுகளில், கேரளாவில் மிளகு பயிரிடும் பரப்பளவு 24 சதவீதம் குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இதனால், இம்மாநிலத்தின் மிளகு உற்பத்தி 50 சதவீதத்திற்கும் மேலாக சரிவடைந்துள்ளது.

**வர்த்தகர்கள்:** கர்நாடகாவை பொறுத்தவரை, பாசன வசதி கொண்ட காபி தோட்டங்களில் மிளகு பயிரிடப்படுகிறது. அதனால், பருவமழையால் ஏற்படும் சாதக, பாதக அம்சங்கள்,இம்மாநிலத்தின் மிளகு உற்பத்தியை பெரிய அளவில் பாதிக்காத நிலை உள்ளது.

சர்வதேச மிளகு கழகம், பல்வேறு நாடுகளில், அதிக அளவில் மிளகு விளையும் மாநில அரசுகளிடம் அதன் உற்பத்தி குறித்த விவரங்களை பெற்று வருகிறது. மேலும், பன்னாட்டு மிளகு வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடம் பெறும் விவரங்களைத் தொகுத்து, சர்வதேச மிளகு உற்பத்தி குறித்த தற்காலிக மதிப்பீட்டை தயாரித்துள்ளது.

எனினும், பெரும்பாலான வர்த்தகர்கள், மிளகு உற்பத்தி குறித்த ஐ.பி.சி-யின் தற்காலிக மதிப்பீடு சரியல்ல என்று கருத்து தெரிவித்துள்ளனர். உலகில், மிளகு உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள வியட்னாம் மற்றும் இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாடுகள், மிளகு உற்பத்தியை குறைத்து மதிப்பிட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

மேலும், இந்நாடுகள் வெளியிட்டுள்ள, மிளகு கையிருப்பு குறித்த தகவலும், உண்மைக்கு மாறானது என அவர்கள் தெரிவித்துள்ளனர். மிளகு உற்பத்தி குறித்து உறுதியாக தெரியாததால், அதன் வர்த்தகத்திலும், விலையிலும், ஏற்றத்தாழ்வு காணப்படுவதாக கூறப்படுகிறது.

**கையிருப்பு:** இந்தியாவில் இவ்வாண்டு இறுதி நிலவரப்படி, மிளகு கையிருப்பு 15 ஆயிரம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மிளகு உற்பத்தி, சென்ற 2010-11ம் ஆண்டு 48 ஆயிரம் டன்னாக இருந்தது. இது, முந்தைய 2009-10ம் நிதியாண்டில், 50 ஆயிரம் டன்னாக உயர்ந்து காணப்பட்டது. நடப்பு 2011ம் ஆண்டின் தொடக்கத்தில், மிளகு கையிருப்பு 14ஆயிரத்து 500 டன்னாக இருந்தது. நடப்பாண்டில், மிளகு பயன்பாடு 4,500 டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மிளகு விலை உயர்வு காரணமாக, அதன் பயன்பாடு 10 சதவீதம் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

தென்னை மரம் ஏறுபவர்களுக்காக கேரளாவில் ஆன்-லைன் டைரக்டரி

நவம்பர் 13,2011,09:54



திருவனந்தபுரம்:கேரளாவில், தென்னை விவசாயிகளின் வசதிக்காக, ஆன்-லைன் டைரக்டரியை, தேங்காய் வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.கேரள மாநிலத்தில் தான், நாட்டிலேயே அதிகளவில், தென்னை வளர்ப்பு நடக்கிறது. இங்கு, 15 கோடி தென்னை மரங்கள் உள்ளன. இவற்றில் ஏறி தேங்காய் பறித்துப் போட, 30 ஆயிரம் பேர் தேவை. ஆனால், அதில் பாதிப்பேர் கூட அங்கு இல்லை.இங்கு, தென்னை மரமேறி, தேங்காய் பறித்துப் போட ஆட்கள் கிடைப்பது, குதிரைக் கொம்பாக உள்ளது. இந்நிலையை மாற்றிட, தேங்காய் வளர்ச்சிக் கழகம், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இக்கழகம் சார்பில், மாநிலத்தில் வேலையற்ற, நல்ல உடல் திறன் மிக்க இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு தென்னை மரங்களில் ஏற பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு, வாரந்தோறும் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தற்போது, மாநிலத்தில் 1,593 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள், தங்களது மரங்களில் தேங்காய் பறித்துப் போட ஆட்கள் கிடைக்காமல் அவதியுறும் நிலையை மாற்ற, தற்போது, மரமேறுபவர்கள் குறித்தான ஆன்-லைன் டைரக்டரியையும் தேங்காய் வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வசதிக்கு, "பிரண்ட்ஸ் ஆப் கோகனட் ட்ரீ" என பெயரிடப்பட்டு, மாவட்டம் வாரியாக எங்கெங்கு தென்னை மரம் ஏறுபவர்கள் உள்ளனர், அவர்களது முகவரி போன்ற விவரங்கள் இடம் பெற்றுள்ளன.இவ்வாறு, 1,200 பெயர்கள், டைரக்டரியில் இடம் பெற்றுள்ளன. இதற்கான ஆன்-லைன் முகவரி: coconutboard.nic.in/friendsdistrict.htm.

**உரங்களின் விலை விரைவில் கட்டுக்குள் வரும்: மு.க.அழகிரி**

First Published : 13 Nov 2011 06:48:55 PM IST

சென்னை, நவ.13: வேளாண் உரங்கள் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் வரும் என மத்திய அமைச்சர் மு.க.அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

டி.ஏ.பி. மற்றும் பொட்டாஷ் உரங்கள் விலை ஏற்றத்தை கட்டுப்பாட்டில் கொண்டுவர உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். டி.ஏ.பி. உரங்கள் 90 சதவீதமும் மற்றும் பொட்டாஷ் உரங்கள் 100 சதவீதமும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

எனவே உலக சந்தையில் இந்த உரங்களின் விலையை பொறுத்து அதே விலையில் இந்தியாவில் விற்கப்பட வேண்டி உள்ளது.

கடந்த வருடம் நிதி அமைச்சர், ஊட்டச்சத்துக்கேற்ற உரமானிய கொள்கையை டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் காம்ளக்ஸ் உரங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இந்த கொள்கையின் மூலம் மேலே கூறப்பட்ட உரங்களுக்கான அரசு மானியம் ஆண்டுக்கு ஒருமுறை நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் அதிகபட்ச உரவிலையை முடிவு செய்ய உற்பத்தியாளர்களுக்கும், இறக்குமதியாளர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கொள்கையில் நான் உடன்பாடு கொண்டிருக்கவில்லை. எனினும் இக்கொள்கையின் மூலம் கடந்தாண்டு கேபினட் கூட்டத்தில் உரங்களுக்கான விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இந்தாண்டு உலகளவில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் சரியான முறையில் போதுமான அளவிற்கு இந்தியாவில் உரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

மேலும் உலகளவில் இந்த உரங்கள் மற்றும் இந்த உரங்களின் மூலப்பொருட்கள் போதுமான அளவில் உற்பத்தி செய்யப்படாததாலும் இந்த உரங்களின் விலை அதிகமாக ஏறி கொண்டிருக்கிறது. மேலே கூறப்பட்டவையை கருத்தில் கொண்டு கடந்தாண்டு அறிமுகப்படுத்தப்பட்ட என்.பி.எஸ். கொள்கையை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என எனது துறையை கேட்டு கொண்டுள்ளேன்.

மேலும் அதிக அளவில் அரசு மானியம் பெறவும், இந்த உரங்களின் அதிகபட்ச சிலையை கட்டுப்பாட்டில் கொண்டு வரவும், பிரதமருக்கும் கடிதம் எழுத உள்ளேன். இதன் விளைவாக உரங்களின் விலை விரைவில் கட்டுப்பாட்டில் வரும் என நம்புகிறேன்.

**பாசனத்துக்காக மேட்டூர் அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு**

First Published : 13 Nov 2011 12:26:53 PM IST

சேலம், நவ.13: காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் பாசனத்துக்காக நீர் அதிகம் திறந்துவிடுமாறு கோரியதை அடுத்து, இன்று முதல் நீர் திறந்து விடுவது அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

தற்போது அணையில் நீர்மட்டம் 104.2 அடியாக உள்ளது. அணையில் இருந்து 10 ஆயிரம் கன அடியாக திறந்துவிடப்பட்ட நீரின் அளவு இன்று காலை முதல் 13 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணைக்கு சுமார் 9 ஆயிரம் கன அடி நீர் வந்துகொண்டிருக்கிறது.

**பாபநாசம் அணை நீர் மட்டம் 103 அடியைத் தாண்டியது**

அம்பை ஷேக்

First Published : 13 Nov 2011 10:15:57 AM IST

அம்பை, நவ.13: மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்த முக்கிய அணையான பாபநாசம் அணையில் நீர்மட்டம் தற்போது 103 அடியைத் தாண்டியுள்ளது.

இன்று காலையில் நெல்லை மாவட்ட அணைகளின் நீர்மட்டம் நிலவரம்:

பாபநாசம் அணை 103.10 அடி சேர்வலாறு அணை 116.30 அடி மணிமுத்தாறு அணை 56.35 அடி கடனாநதி அணை 81.90 அடி ராமநதி அணை 75.25 அடி

தினகரன்

**நிதிநெருக்கடியால் சர்க்கரை, பருத்தி ஏற்றுமதி பாதிக்கும்**

பதிவு செய்த நாள் : 11/14/2011 7:1:50



புதுடெல்லி: சர்வதேச சந்தையில் சர்க்கரை, பருத்தி மற்றும் கோதுமை உள்ளிட்ட பொருட்களுக்கான தேவை குறைந்து வருவதால், இவற்றின் விலை 15 முதல் 20 சதவீதம் வரை சரியும் என வேளாண் விளைபொருள் விலை நிர்ணய ஆணைய தலைவர் அசோக் குலட்டி தெரிவித்துள்ளார்.

இதுதவிர, மீன் மற்றும் விலங்கு உணவுப் பொருட்கள் ஏற்றுமதியும் பாதிக்கப்படும். சர்வதேச சந்தையில் பொருட்களின் விலை குறைந்து வருவதால் பாமாயில் விலையும் குறையும். இந்தியாவை பொறுத்தவரை இது சாதகமான விஷயம்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கோயம்பேடு மொத்த அங்காடிக்கு காய்கறி வரத்து அதிகரிப்பு தக்காளி, வெண்டைக்காய், முருங்கைக்காய் விலை குறைந்தது



மொத்த காய்கறி மார்க்கெட்டான கோயம்பேட்டில் காய்கறி விலை குறைந்து இருந்ததால் தங்கள் வீட்டுக்கு தேவையான காய்கறிகளை ஆர்வத்துடன் தேர்வு செய்யும் குடும்ப பெண்களை படத்தில் காணலாம்.

சென்னை, நவ.14–
கோயம்பேடு மொத்த அங்காடிக்கு காய்கறி வரத்து அதிகரித்து உள்ளதால் தக்காளி, வெண்டைக்காய், முருங்கைக்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதிர்ச்சியை கொடுத்த காய்கறிகள்

கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையின் காரணமாக சென்னை கோயம்பெடு மொத்த அங்காடிக்கு வர வேண்டிய காய்கறி வரத்து குறைந்தது. இதனால் காய்கறி விலை தாறுமாறாக உயர தொடங்கியது. ஒரு கிலோ தக்காளி ரூ.35 வரை விற்பனையாகி நடுத்தர மக்களுக்கு அதிர்ச் சியை கொடுத்தது. அதற்கு முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.8 என்ற அளவிலேயே விற்பனையாகி வந்திருந்தது.

தற்போது மழை குறைந்து வெயில் அடிக்க ஆரம்பித்து இருப்பதால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறி வரத்து தொடர்ந்து அதிகரிக்க தொடங்கியிருக்கிறது. தினமும் 80–க்கும் மேற்பட்ட லாரிகளில் இருந்து தக்காளி வந்து கொண்டிருக்கிறது.

விலை குறைந்தது

கடந்த ஒரு வாரத்தைஒப்பிடுகையில் நேற்று தக்காளி, வெண்டைங்காய், முருங்கைகாய் விலை சற்று குறைந்துள்ளது. அதே நேரத்தில் பீன்ஸ், கேரட், முட்டைக்கோஸ் விலை அதிகரித்து உள்ளது. கோயம்பேடு மார்க்கெட் காய்கறி (கிலோவில்) விலை நிலவரம் வருமாறு:–

ஒரு கிலோ நாட்டு தக்காளி ரூ.35–ல் இருந்து ரூ.20 ஆகவும், பெங்களூர் தக்காளி ரூ.22–க்கும் விற்பனை செய்யப்படுவதாக கோயம்பேடு தக்காளி வியாபாரி சங்க தலைவர் தியாகராஜன் கூறினார். இதே போல் முருங்கைக்காய் கட்டு ரூ.30–ல் இருந்து ரூ.20–க்கும், வெண்டைக்காய் ரூ.18–ல் இருந்து ரூ.15–க்கும், அவரைக்காய் ரூ.35–ல் இருந்து ரூ.30–க்கும் குறைந்து விற்பனையானது. இஞ்சி ரூ.35–லிருந்து ரூ.20–க்கும், கீரை ரூ.10–லிருந்து ரூ.8–க்கும், பாகற்காய் ரூ.17–லிருந்து ரூ.12–க்கும், சாம்பார் வெங்காயம் ரூ.30–ல் இருந்து ரூ.25–க்கும் குறைந்தும் விற்பனையானது.

கேரட் ரூ.32–ல் இருந்து ரூ.40 ஆகவும், புடலங்காய் ரூ.14–ல் இருந்து ரூ.15 ஆகவும், முட்டைக்கோஸ் ரூ.8–ல் இருந்து ரூ.9 ஆகவும், பீன்ஸ் ரூ.18–ல் இருந்து ரூ.25 ஆகவும், பீட்ரூட் ரூ.13–லிருந்து ரூ.15–க்கும் அதிகரித்தும் காணப்பட்டது என்று கோயம்பேடு மார்க்கெட் ஆலோசகர் சவுந்தரராஜன் தெரிவித்தார்.

சில்லரை கடைகளில் அதிகம்

கத்திரிக்காய் ரூ.8 முதல் ரூ.10 வரையும், உருளைக்கிழங்கு ரூ.13 முதல் ரூ.15–க்கும் விற்பனையானது. ஆந்திரா பெரிய வெங்காயம் ரூ.12–ஆகவும், மராட்டிய வெங்காயம் ரூ.18–க்கும் விற்பனையானது. சவுசவுக் ரூ.10–க்கும், கொத்தமல்லி கட்டு ரூ.5–க்கும், பச்சை மிளகாய் ரூ.12–க்கும் விற்பனையானது.

மொத்த மார்க்கெட்டை காட்டிலும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சிறிய சில்லரை காய்கறி கடைகளில் காய்கறிகளின் விலை மட்டும் குறைந்தபாடியில்லை. எல்லா இடத்திலுமே காய்கறிகளின் விலை உச்சத்தில் தான் காணப்பட்டது.

பல இடங்களில் ஒரு கிலோ தக்காளி ரூ.30–க்கு விற்கப்பட்டது. அதைபோல் மற்ற காய்கறிகளின் விலையும் மொத்த விலையில் இருந்து ரூ.10 வரை அதிகரித்து சில்லறை கடைகளில் விற்பனை செய்து வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.